## கே.எம்.சி.எச். மருத்துவமனையில்

# வெரிகோஸ் வெய்ன் சிறப்பு முகாம் ஜூன் 5 முதல் 29 வரை

## இலவச ஆலோசனை மற்றும் 50% கட்டணத்தில் ஸ்கேன் பரிசோதனை

**கோவை, ஜூன் 7:** கே.எம்.சி.எச். மருத்துவமனை நரம்பு வீக்க சிறப்பு சிகிச்சை மற்றும் கதிரியக்க துறை நிபுணர் டாக்டர் வெங்கடேஷ் அளித்த பதில்கள்:

*** நரம்பு வீக்கம் என்றால் என்ன... யாருக்கு ஏற்படும்... அதனால் வரும் பாதிப்புகள் ...**

தோல்களுக்கு கீழ் செல்லும் ரத்த நாளங்கள் வீக்கமடைந்து, பருத்து காணப்படுவது நரம்பு வீக்கம் ஆகும். இந்நோய் பலருக்கும் எற்படும்.இந்த நோயானது அதிக நேரம் நின்று கொண்டு பணிபுரிபவர்கள், பருமனாக இருப்பவர்கள் மற்றும் பெண்களுக்கு மகப்பேறுக்குப்பிறகு இது வரும். பரம்பரையாகவும் வருவதற்கு வாய்ப்பு உண்டு. தோலுக்கு கீழ் செல்லும் இரத்த குழாய் புடைத்து இருத்தல், தோலின் நிறம் மாறுதல், காலில் வலி, வீக்கம் மற்றும் அரிப்பு போன்றவை இந்நோயினால் வரும், இந்த நோயை ஆரம்ப நிலையிலேயே சரி செய்ய தவறினால் காலில் இருந்து இரத்த கசிவு மற்றும் ஆறாத புண்கள் வரக்கூடும்.

*** நரம்பு வீக்கத்தை குணப்படுத்தும் சிகிச்சை முறைகள்...**

நரம்பு வீக்கம் நோய்க்கு அறுவை சிகிச்சை அல்லது லேசர் சிகிச்சை மூலம் தீர்வு செய்யலாம். ஆனால் தற்போது கே.எம்.சி.எச்.மருத்துவமனையில் நவீன சிகிச்சை முறையாக நுண்துளை அறுவை சிகிச்சை (பின் ஹோல் சர்ஜரி) மூலம் இந்நோயை முழுமையாகக குணப்படுத்திவருகின்றோம். நுண்துளை அறுவை சிகிச்சை என்பது சிறிய துளை மூலம் பாதிக்கப்பட்ட இரத்தக்குழாய்க்குள் (ரேடியோ பிரிக்வன்சி அபலேசன் டிவைஸ்) கருவியை செலுத்தி, அதனால் உண்டாகும் வெப்பம் மூலம் இரத்த குழாயில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை சீர் செய்ய முடியும். இது மட்டும் அல்லாமல், இந்த கருவியை செலுத்த முடியாத பாதிக் கப்பட்ட இரத்த குழாய்களில்



ஊசி மூலம் மருந்து செலுத்தியும் (போம் சிகிலிரோதெரபி) இந்நோய்க்கு சிகிச்சை அளிக்கலாம். இது ஒரு வலியில்லா சிகிச்சை முறையாகும். இக்கருவிகள் மிக துல்லியமாக செயல்படுவதால்,இரத்த குழாய்க்கு பக்கத்தில் உள்ள திசுக்களுக்கு எந்த வகையான பாதிப்பும் ஏற்படாது. இச்சிகிச்சைக்கு பின்பு கால்களில் எந்த தழும்பும் காணப்படாது. சிகிச்சைக்கு பின் ஒரே நாளில் நடைமுறை வாழ்க்கைக்கு திரும்பி விட முடியும்.

சிறப்பு முகாம் : வெரிகோஸ் வெய்ன் சிறப்பு முகாம் கடந்த 5ம் தேதி துவங்கியது. வரும் 29ம் தேதி வரை காலை 9மணி முதல் பிற்பகல் 3 மணி வரை நடைபெறும். இந்த சிறப்பு முகாமில் மருத்துவர் ஆலோசனை இலவசமாகவும், டாப்ளர் ஸ்கேன் 50% சிறப்பு சலுகை கட்டணத்தில் வழங்கப்படுகிறது.

மேலும் விபரங்களுக்கு, நரம்பு வீக்க சிகிச்சை மற்றும் கதிரியக்க துறை நிபுணர் டாக்டர் வெங்கடேஷ், கே.எம். சி.எச்.மருத்துவமனை, அவினாசி ரோடு, கோவை. முன்பதிவிற்கு : 7339333485, இ-மெயில் : drvenkatesh@kmchhospitals.com ஆகியவற்றிலும் தொடர்பு கொள்ளலாம்.

-Advt